# மேல் மாகாண மாகாண சபை - சபைக்கூட்டம்

**2019 ஜனவரி மாதம் 08 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.12.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□□/vi (1)18/75)**

அ. கம்பஹா மாவட்டத்தின் ம/ப பெம்முல்ல வீகொட சணச சங்கத்தின் எல்லா சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு ?

ஆ. கம்பஹா மாவட்டத்தின் ம/ப பெம்முல்ல வீகொட சணச சங்கத்தின் வைப்பாளர்களின் காலம் நிறைவடைந்தும் செலுத்தப்படும் வட்டி நிதி மீண்டும் வழங்கப்படுவதில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அச் சங்கத்தில் வைப்பில் இடப்பட்ட நிதி அதன் தவிசாளரின் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றான திகாயு என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அச் சங்கத்தின் வைப்பாளர்களுக்கு அவர்களின் வைப்புக்களுக்கு உரிய வட்டி மற்றும் எல்லா நிதியும் வைப்பாளர்கள் வேண்டுகோள் விடுக்கும் எந் நேரத்திலும் வழங்க இயலுமா என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. சங்கத்தின் நிதி தவிசாளரினால் அவரின் தனிப்பட்ட நிறுவனத்தினூடாக காணிகளைக் கொள்வனவு செய்யும் மற்றும் விற்கும் நடவடிக்கைக்கும் அத்துடன் வேறு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. தமது தற்றுனிப்பிற்கு இணங்க செயற்பட்டு, உரிய வைப்பாளர்களுக்கு அவர்களுக்குரிய நிதியினை செலுத்தாது செயற்படும் அந்த தவிசாளருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் உரிய வைப்பாளர்களுக்கு நீதி ஒன்றினை நிலை நாட்ட எடுக்கும் நடவடிக்கையை நீங்கள் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2018.12.04 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□□/vi (1)18/76)**

அ. கம்பஹா மாவட்டத்தின் ம/ப பெம்முல்ல வீகொட சணச சங்கத்தின் தற்போதைய தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் பெயர் என்ன என்பதையும் அவர்கள் வேறு நிறுவனம் ஒன்றில் பணிப்பாளர் சபையில் பிரதான பதவி ஒன்றினை வகிக்கின்றனரா என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அத் தவிசாளரினால், அவரின் மற்றும் பணிப்பாளர் பெயரில் காணப்படும் திகாயு லேன்ட் ஹோம்ஸ் என்ற பெயரில் தாபனம் ஒன்று நடாத்தப்படுகின்றது என்பதனையும் சணச சங்கத்தின் நிதி அந்த நிறுவனத்திற்கு எந்தவொரு வட்டியோ, பிணையாளியோ இல்லாது வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அச் சணச சங்கத்தின் வைப்பு சட்டத்திற்கு முரணாக தவிசாளரினால் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக உரிய சணச சங்கம் நிதிப் பிரச்சினைக்கு உட்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. இவ் வேளையில் இவ் வைப்பாளர்களினால் தங்களது நிதியிற்கு வேண்டுகோள் விடுக்கும் போது தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினால் அது வழங்கப்படுவதில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. உரிய சணச சங்கத்தின் வைப்பாளர்களுக்கு விரைவாக நிதியினை பெற்றுக் கொடுக்க எடுக்கும் நடவடிக்கை யாது என்பதை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. உரிய சங்கத்திற்குரிய நிதியினை வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கை யாது ?

எ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)18/79)**

அ. i. ஜயவர்தன புர வலயத்திற்கு உரிய தலபத்பிடிய சித்தார்த வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் விரிவுரைக் குழுவிற்கு இடையே காணப்படும் பிரச்சினை தொடர்பாக இவ் வேளையில் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

ii. எப்போது அவ் விசாரணைகளுக்கு காரணமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன ?

iii. இதன் மூலம் சாட்டப்படும் குற்றங்கள் யாவை ?

iv. அந்த விசாரணை இவ் வேளையில் நிறைவு பெற்றுள்ளதா ?

v. இல்லையாயின் அதற்குரிய காரணம் யாவை ?

ஆ. i. அவ் விசாரணைகளின் பலாபலனாக பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்பட்டுள்ளாரா ?

ii. அதற்கிணங்க அவருக்கு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக ஒழுங்கான விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

iii. அந்த ஆசிரியருக்கு ஆரம்ப விசாரணை ஒன்றின் கீழ் இடமாற்றம் ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரினால் வேறு இடமாற்றம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதா ?

iv. அது எதன் காரணமாக ? எப் பாடசாலைக்கு ?

இ. இதற்கிணங்க எல்லா முறைப்பாடுகள் தொடர்பாகவும் விசாரணையினை மேற்கொண்டு அதன் முடிவிற்கு இணங்க எதிர்கால நடவடிக்கையை எடுப்பீர்களா ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. சபை நடவடிக்கை (I)

**<u>கௌரவ சபாநாயகரினால் முன்வைக்கப்படுவதற்கு</u> :**

**பிரேரணை :**

2018.10.23 மற்றும் 2018.12.19 ஆகிய தினங்களில் நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவின் இணக்கத்தின் படி நடவடிக்கை ஒழுங்கு விதி 39(4) மற்றும் 53(3) இன் ஏற்பாடுகள் தொடர்பாக கருத்தில் கொள்ளாது இன்றைய தினம் (2019.01.08 ஆந் திகதி) உரிய நிகழ்ச்சி நிரலில் இலக்கம் XII இல் தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் ஒழுங்குகள் முறையே விடய இலக்கம் 02 மற்றும் 01 என்ற முறையில் இடம்பெற வேண்டும் எனக் கருதி செயற்பட வேண்டும்.

## XI. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் முனவைக்கப்படும் நியதிச் சட்டம்**

**“மேல் மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க மேல் மாகாணத்தின் சுற்றுலாச் சபை நியதிச் சட்டம் ”**

**(முதலாம் முறை வாசிப்பு)**

மேல் மாகாணத்தினுள் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில் திறனினை உயர்த்துதல் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல், சுற்றுலாச் சேவைகளின் தரத்தினை முன்னேற்றுதல், சுற்றுலா ஈர்ப்புத் தலங்களை அண்டி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மாகாண தேசிய மற்றும் வெ ளிநாட்டு சுற்றுலா நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காகவும் மேல் மாகாண சுற்றுலாச் சபையினை கூட்டிணைப்பதற்காகவும் 1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலாச் சபை நியதிச் சட்டத்தினை செயலற்றதாக்குவதற்காகவும் அது தொடர்பான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவுமான நியதிச் சட்டமாகும்.

## XII. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

நிகழ்ச்சி நிரலில் இலக்கம் X சபை நடவடிக்கை பிரேரணைக்கு இணங்க தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகளில் ஒழுங்கு முறை மாற்றமடைவதற்கு இடமுண்டு

**01.** **கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்**

மேல் மாகாணத்தின் கிராமிய பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இன்று போக்குவரத்துக் கஷ்டம் பாரிய அளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது நாங்கள் யாவரும் அறிந்த விடயமாகும். அதன் காரணமாக பாடசாலை வேன் கலாசாரம் தோன்றியுள்ளது பொருளாதார கஷ்டத்தினை கருத்திற்கொண்டு பாடசாலை பிள்ளைகளின் போக்குவரத்து கஷ்டத்தினை இல்லாதொழிப்பதற்காகவும் தேகாரோக்கியம் உள்ள பிள்ளைகளை உருவாக்குவதற்காகவும், 8 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றினைப் பெற்றுக்கொடுப்பது சிறந்தது எனவும் அதற்காக கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ஏதாவது சதவீதம் ஒன்றின் கீழ் ஏற்பாட்டினை ஒதுக்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்றினை பெற்றுக்கொடுப்பது சிறந்தது என இம் மேல் மாகாண மாகாண சபை எண்ணுகின்றது. **(பி/vi(1)18/07)**

**02.** **கௌரவ அஜந்த நிரோஷன் பாதுக்க அவர்கள்**

நுண் நிதிக் கடனை வழங்குவது தனியார் பிரிவுத் தாபனங்களினால் மிகவும் சூட்சமமான முறையில் மேல் மாகாணத்திலும், நாடு முழுவதிலும் இடம்பெறுகின்றது. குழுக்களுக்கான கடன் மற்றும் தனிப்பட்ட கடன் 40% வருடாந்த வட்டியின் கீழ் அறவிடப்படுகின்றது, அது பாரிய அளவு அநீதியாக சுரண்டும் நடவடிக்கையாகும். இக் கடன் முறை தொடர்பாக மத்திய வங்கியின் மேற்பார்வை தற்போது போதுமானதில்லை ஆகையால் இந் நிலைமை தொடர்பாக அதிகளவு கவனம் ஒன்றைச் செலுத்தி இவ்வாறான கடன் முறையை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய சட்டத்திட்டங்களை விரைவாக தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு இம் மேல் மாகாண மாகாண சபை நிதி அமைச்சிடமும் மத்திய வங்கியிடமும் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/vi(1)18/08)**

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.12.28** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம்
மேல் மாகாண மாகாண சபை,
11ஆம் மாடி,
மேல் மாகாண சபை காரியாலயத்தின் புதிய கட்டடம்,
204,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
சிறீ ஜயவர்தனபுர,
பத்தரமுல்லை.